செ.வெ.எண் -41 நாள்:11.02.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (11.02.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 45 முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் கலந்துகொண்டு, 11 கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

மேலும், 07 முன்னாள் படைவீரர் வாரிசுதாரர்களுக்கு ரூ.7 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் கல்வி உதவித்தொகை மற்றும் மாதாந்திர நிதியுதவிக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் லெப்.கமாண்டர் தி.சங்கீதா (ஓய்வு), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் எஸ்.ஜி.ரமேஷ், முன்னாள் படைவீரர் நல அலுவலக கண்காணிப்பாளர் ம.கலையரசிகாந்திமதி மற்றும் முன்னாள் படைவீரார்கள், வாரிசுதாரர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**